## அரசுப் பணியாளர் நலன்:

★ அரசுப் பணியாளர்களுக்கு வீட்டு வாடகைப்படி உயர்த்தப்பட்டுள்ளது.

★ வீடு கட்டக் கடனுதவிக்கான ஒதுக்கீடு ரூ.25 கோடியிலிருந்து ரூ.34.50 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

★ அரசு அலுவலர் நலவாழ்வு நிதியின் கீழ் வழங்கப்படும் மானியம் ரூ.25,000-லிருந்து ரூ.50,000 அல்லது அறுவைச் சிகிச்சைக் கான செலவில் 75 சதவிகிதம் இதில் எது குறைவோ அது வழங்கப்படும்.

★ அரசுப் பணியாளர் குழந்தைகளுக்கான உயர்கல்வி முன்பணம் உயர்த்தப்பட்டுள்ளது.

## இந்த இதழில்...


தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கை — 1993-94 ... 2

'மக்கள் என் பக்கம் இருப்பதால் இறுதி வெற்றி எனக்குத்தான்!' — சேலம் விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை ... 18

'ஏழை எளிய மக்களின் சிரிப்பிலே வாழ்வின் அர்த்தத்தையே காண்கிறேன்!' — தருமபுரி விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை ... 24

கலைமாமணி விருது வழங்கும் விழா —மாண்புமிகு முதல்வர் உரை ... 29



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2024

பங்குனித் திங்கள் - 3

மலர்:23

இதழ்:18

16-3-1993



நான்காம் அட்டையில்:

19-வது அகில இந்தியச் சுற்றுலாத் தொழில் பொருட்காட்சியில், சில எழில்மிகு காட்சிகள்...

# மக்கள் என்பக்கம் இருப்பதால், இறுதி வெற்றி எனக்குத்தான்!

## சேலம் விழாவில் முதல்வர் உரை

ஆர்ப்பரித்து, அலைகடலென இங்கே திரண்டு, என்னைப் பாசத்தோடு வரவேற்கக் காத்திருக்கும் உங்கள் முகங்களில், நான் காணுகின்ற ஒளியையும், பெருமிதத்தையும், மகிழ்ச்சியையும் கண்டு, பெரும் பூரிப்படைகின்றேன். எத்திசை நோக்கினும், எங்கிருந்து வந்தது இந்த மக்கள் வெள்ளம், என்று எண்ணத் தோன்றிடும் மக்கள் கடலின் மத்தியில், இன்று மாங்கனி நகராம் சேலத்தில், உங்களைச் சந்திப்பதில், மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறேன். என்னை வளர்த்து, ஆதரித்து, அன்பு காட்டிவரும் தமிழ்ப் பெருமக்களுக்காக, அல்லும் பகலும் நான் தொடர்ந்து பாடுபட்டு வருவதன் பலன், முழுமையாக உங்களைச் சென்றடைகிறது என்பதன் அடையாளமே, இங்கே திரண்டுள்ள மக்கள் கூட்டம் என்பதை அறிந்து, நிம்மதி அடைகின்றேன்.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய், உலக அரங்கில் பட்டொளி வீசிப்பவனி வந்து கொண்டிருந்த தமிழகம்; எத்தனை எத்தனையோ இன்னல் நேர்ந்த காலங்களில் எல்லாம், தன் நிறம் மாறாமல், ஒளி குன்றாமல், வரலாற்றில் தனக்கென, ஓர் தனி இடத்தைப் பெற்று வந்த தமிழகம்; இடையில் ஏற்பட்ட சில அரசியல் மாற்றங்களினாலும், பொருளாதாரப் பின்னடைவுகளினால் உருவாக்கப்பட்ட பெரும் நெருக்கடியினாலும், வன்முறைக் கலாச்சாரத்தினாலும், தட்டுத் தடுமாறி, தவித்து நின்ற காலக் கட்டத்தில், உங்கள் அன்புச் சகோதரியான என் மீது, நீங்கள் முழு நம்பிக்கை வைத்து, தமிழகத்தை ஆளும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தீர்கள்;

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை, மீண்டும் ஆட்சிக் கட்டிலில் அமர்த்தினீர்கள். அந்த உங்கள் நம்பிக்கை வீண் போகாது, பேரறிஞர் அண்ணாவும், இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரும், கற்றுத் தந்த கடமை உணர்வோடும், தமிழ் நிலத்திற்கே உரித்தான கட்டுப்பாடு, மற்றும் கண்ணிய மிக்க பண்பாட்டோடும், தமிழர்களை எவரும் பயமுறுத்திப் பணிய வைத்துவிட முடியாது என்ற உண்மையை, உலகமும், இந்தியத் துணைக் கண்டமும், உணர்கின்ற வகையில் தான், கடந்த ஒன்றே முக்கால் ஆண்டுக் காலமாக, மக்கள் நலனை மட்டுமே மூலக் கருத்தாயக் கொண்டு, நீங்கள் இட்ட கட்டளைகளைச் சிரமேற்கொண்டு செயல்படுத்தி வந்துள்ளேன்.

தமிழகத்தின் ஒவ்வொரு வீட்டிலும், விளக்கேற்றி வைப்பதே என் குறிக்கோள் என்ற சூளுரை எடுத்துத்தான், முதலமைச்சர் நாற்காலியில் நான் அமர்ந்தேன்; அந்த என் இலட்சியம் நிறைவேறும் நாள் வரை, ஓயாது ஒழியாது உங்களுக்காக உழைத்துக் கொண்டே இருப்பேன்.

இந்த என் இலட்சியப் பயணத்திற்கு எதிராக, எத்தனை எத்தனை இடையூறுகள் வந்தாலும், புற்றீசல் போல், புல்லுருவிகளால், இன்னல்கள் தோற்றுவிக்கப்பட்டாலும், இங்கே இலட்சோப இலட்சமெனத் திரண்டிருக்கும், மக்கள் சக்தியின் துணை கொண்டு, அவற்றை வீழ்த்திக் காட்டுவதோடு, விரட்டி அடிக்கவும் முடியும், என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

தமிழகத்தில் கடந்த ஒன்றே முக்கால் ஆண்டுக் காலமாக, உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில், ஓர் நல்லாட்சி அமைந்ததன் பலன்; இன்று இலட்சோப இலட்சம் மக்கள் வாழ்வில், ஒளி வீசுகின்றது. இதோ, இன்று உங்கள் கண் முன்னே, சேலம் மாவட்ட மக்களின் நலனுக்காக, 353 கோடி ரூபாய்க்கான திட்டங்களை, நான் இன்று தொடங்கி வைத்துள்ளேன்.

அடிமட்டத்தில் - நசுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டுக் கிடக்கின்ற, ஏழை எளிய மக்களின் வாழ்வில் ஒளியேற்றும், பல சீர்மிகு மக்கள் நலத் திட்டங்களின் கீழ், உதவிகள் பலவற்றை, இங்கே வழங்க உள்ளேன்.

நிறைவேற்றப்பட்டு, இன்று பயன் தரும் வகையில், தொடங்கி வைக்கப்படும் திட்டங்கள், மற்றும் பணிகள் மட்டும், 83 கோடியே 53 இலட்சம் ரூபாய்க்கு உரியது ஆகும். மேலும், அரசின் ஒப்புதல் அளிக்கப்பட்டு, இன்று அடிக்கல் நாட்டப்படும் பணிகளின் மதிப்பு மட்டும், 249 கோடியே, 95 இலட்சம் ரூபாய் ஆகும். அதாவது, ஏறத்தாழ 250 கோடி ரூபாய்!

இவை மட்டும் அல்லாது, நேரடியாக வறுமைக் கோட்டிற்கும் கீழே வாழ்ந்து, வதங்கிக் கொண்டிருப்போருக்கும், தாழ்த்தப்பட்டோர் மற்றும் சமுதாயத்தில் பின் தங்கியிருப்போர், ஏழை எளியோர் என, ஏறத்தாழ 58,552 பேருக்கும், 19 கோடியே 72 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, பல நலத் திட்ட உதவிகள், இன்று இங்கே வழங்கப்பட உள்ளன. எல்லாவற்றையும் கூட்டிப் பார்ப்பீர்களானால், சேலம் மாவட்ட மக்களுக்கென, மொத்தம் 353 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டங்களை, உங்களுக்கு அர்ப்பணிக்கும் விழா தான், இன்றைய விழா என்பதை அறிவீர்கள்.

இன்றைய தினம், இங்கே கோடிக் கணக்கான ரூபாய் மதிப்பீட்டில், தொடங்கி வைக்கப்படும் பணிகளின் பலன், நமக்குக் கிட்டும் நாள், வெகு தொலைவில் இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். தொடங்கி வைக்கப்படும் ஒவ்வொரு திட்டமும், இந்த இந்தக் காலக் கெடுவுக்குள் முடித்தாக வேண்டும், என்ற கடுமையான உத்தரவோடு தான், கால்கோள் நாட்டப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம், இம்மாவட்ட மக்கள், மன நிறைவு கொள்ளத்தக்க வகையில், இங்கே நிறைவேற்றப்படும் இத்திட்டஙகளைப் போல், கடந்த ஒன்றே முக்கால் ஆண்டுக் காலத்தில், தமிழக மக்கள் அடைந்த பலன்கள், கணக்கற்றவை ஆகும்.


தமிழகம் இன்றைக்கு ஆக்கபூர்வமான திட்டங்களை, ஆய்ந்து தீட்டி, அருஞ்செயல்கள் புரிந்து, மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக, முன்னேற்றப் பாதையில் வெற்றி நடைபோடுகிறது என்றால், அது மிகையாகாது.

இதன் பின்னரும் என்னைச் சிலர் ஏசுகிறார்கள்; ஏளனம் பேசுகிறார்கள்; இன்னும் சிலர் பின்னாலிருந்து முதுகிலே குத்திட, நேரம் பார்த்துக் காத்திருக்கின்றார்கள்.


தமிழகத்தில் தற்போது, வேலையற்ற வீணர்களின் பிதற்றல் பெருத்து வருகிறது. 'வேலையற்ற வீணர்களின் மூளையற்ற வார்த்தைகளை வேடிக்கையாகக் கூட, தமிழக மக்கள் நம்பிவிட மாட்டார்கள்', என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. எனவே வேறு எந்தச் சிந்தனைக்கும் இடமளிக்காது, தொடர்ந்து தொய்வின்றி, உங்களுக்காகப் பணியாற்றுவதே என் கடமை என்பதை, நெஞ்சில் நிறுத்திச் செயல்படுகிறேன் என்பதை, இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

வரலாற்றில் நம்முடைய பழம் பெருமையும், நாகரீகமும், முதல் இடம் பெற்றுத், தழைத்தோங்கி வந்திருந்தாலும், நவீன வளர்ச்சிக்கு ஏற்றவாறு, நம் பொருளாதாரம் சிறந்தோங்கிடவில்லை. அறிவியல், தொழில் நுட்ப வளர்ச்சியின் வேகத்தோடு, நமது பொருளாதார வளர்ச்சி பற்றிக் கவனம் செலுத்தாத ஓர் தேக்க நிலை, தமிழகத்தில் இருப்பது அறிந்து, பெரும் வேதனை அடைந்தேன்.

கடந்த 20 ஆண்டுகளில், மத்திய அரசின் சார்பில், எந்த ஒரு பெருந்தொழிலும் தமிழகத்தில் தொடங்கப்பட







வில்லை என்றால், எண்ணிப் பாருங்களேன் - எந்த அளவுக்கு நாம் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளோம் என்பதை.

இதே சேலத்தின் அருகில், பெருமளவில் கிடைக்கும் இரும்புத் தாதுவைப் பயன்படத்தி, இரும்பு எஃகு ஆலை அமைக்குமாறு, தொடர்ந்து வற்புறுத்தியும், உருக்காலைக்குப் பதிலாக, உருட்டாலைதான் தொடங்கினார்கள் என்பதை, நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

இந்நிலையில் தான், ஆட்சிப் பொறுப்பேற்றது முதல், மீண்டும் மீண்டும் தொடர்ந்து வற்புறுத்தியதன் பலனாக, சென்னை அருகே 2,000 கோடி ரூபாய் முதலீட்டில், ஆரோமேடிக் தொழிற்சாலை அமைக்க, மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த நம் முயற்சியின் காரணமாக, 70,000 பேருக்கு வேலை கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இது போன்ற அதிக அளவிலான வேலை வாய்ப்பு, கடந்த இருபது ஆண்டுகளில், ஒன்று கூடத் தமிழகத்திற்குக் கிடைத்ததில்லை.

எங்களது முயற்சி இப்போது பலன் தர ஆரம்பித்துள்ளது. தொழில் முனைவோர்கள் பலர், தமிழ்நாட்டில் தொழில் தொடங்க முன் வந்துள்ளார்கள். சென்ற டிசம்பர் மாதம், தொழில் அதிபர்களை நான் நேரில் சந்தித்து, இரண்டே நாட்களில், 8,500 கோடி ரூபாய் மதிப்பீட்டிற்கான, 27 தொழிற்சாலைகளுக்கு அனுமதியளித்தேன். அவை அனைத்தும் விரைவில் தொடங்கப்படும்.

இனி தமிழகத்தில், மின் வெட்டும் இருக்காது; மின் வெட்டினால் தொழில் பாதிப்பும் இருக்காது. சேலம் மாவட்டம், தொழில் துறையில் எவ்வளவு முன்னேற்றம் அடைந்துள்ளது, என்பதை நான் அறிவேன். இன்னும் நிறையத் தொழிற்சாலைகளை இங்கே அமைக்கலாம்; அதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்ந்து அறிவிக்குமாறு, அதிகாரிகளைப் பணித்துள்ளேன்.

பொருளாதார வளர்ச்சிப் பணிகளிலும் சரி; தொழில் வளர்ச்சித் திட்டங்களிலும் சரி; தமிழகத்திற்கு இனி தேக்க நிலை, எப்போதும் இருக்காது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இனி ஒவ்வொரு நாளும் முன்னேற்றம்தான் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் கூற விரும்புகின்றேன்.

எத்தகைய திட்டப் பணிகளை மேற்கொண்டு செயலாக்கினாலும், கஷ்டப்படுகிற மக்களை மறக்கலாகாது என்பது தான், நம் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், நமக்குக் காட்டிய அன்பு வழி. இந்தியாவின் பெரும்பாலான மாநிலங்கள், நல்வாழ்வுத் திட்டங்களைப் பின்னுக்குத் தள்ளி, வளர்ச்சித் திட்டங்களையே கவனிக்க முற்பட்ட, இந்த நவீன யுகத்தில், நாமும் கூட பொருளாதாரப் பிரச்சினைகளில் சிக்குண்டிருந்தாலும், புரட்சித் தலைவர் வழிவந்த நாம், ஏழைகளை மறக்காமல், ஏழை எளியோரையும், வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள அப்பாவி மக்களையும், கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்து வருகின்றோம்.

அந்த வகையில் பொங்கல் திருநாளை முன்னிட்டு, கடந்த இரண்டு ஆண்டுகளாக, ஒரு கோடியே 20 இலட்சம் ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கும், நகர்ப்புற ஏழை எளியோருக்கும், இலவசமாக சேலை வேட்டிகளை வழங்கியுள்ளோம். தமிழகத்தின் கிராமங்கள் தோறும், இலவச மருத்துவ நல முகாம்கள் நடத்தி, மக்கள் நல்வாழ்வைப் பேணியுள்ளோம். முதியோர் நலன், ஊனமுற்றோர் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல்வாழ்வு, போன்ற அத்தனைத் திட்டங்களும், அரசின் நேரடிப் பார்வையில், செவ்வனே நிறைவேறி வருகின்றன.

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். குழந்தைகள் சத்துணவுத் திட்டம், குழந்தைகளுக்கான ஊட்டச் சத்துத் திட்டம், என்பதோடு நில்லாமல், எங்கள் அரசு இந்தியாவிலேயே முதன் முதலாக, அரசாங்கமே நர்சரி பள்ளிகள் நடத்துகிறது, எனப் பெயர் பெறும் வகையில், அவை சீரமைக்கப்பட்டுள்ளன.

அண்மையில், பெண் குழந்தைகளைப் பாதுகாக்கும் திட்டத்தை, அரசே அவர்களை எடுத்து வளர்க்கும், தொட்டில் குழந்தைகள் திட்டத்தை அறிமுகப்படுத்தி இருக்கின்றேன். ஆண்களுக்குப் பெண்கள் குறைந்தவர்கள் அல்ல.

பெண்ணுக்குச் சம உரிமை தர வேண்டும், என்று குரல் கொடுத்த தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். வாழ்ந்த மண்ணில், பெண் குழந்தைகளை அழிக்கும் பாவம், இனியும் தொடரக் கூடாது. அதனைத் தொடரவிட மாட்டேன் என்று சூளுரைத்துத் தான், புரட்சிகரமான இந்தப் புதிய திட்டத்தைக் கொண்டு வந்தேன். இந்தத் திட்டத்தையும் அரசியல் இலாபத்திற்காக, என் மீதுள்ள காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, ஒரு சாரார் குறை கூறுகின்றனர்.

நான் அவற்றைப் பற்றி எல்லாம் கவலை கொள்வதில்லை. இன்று வரை 32 பெண் சிசுக்களின் படுகொலையை, இத்திட்டத்தினால் தடுத்திருக்கின்றோமே, என்ற மன நிம்மதியைத்தான், நான் அடைகின்றேன். இத்திட்டம் அறிமுகப் படுத்தப்படாமல் இருந்திருக்குமானால், அந்த 32 பச்சிளம் பெண் குழந்தைகளும், பலியாகி இருப்பார்களே என்பதைக் கூட மறந்து, மனிதாபிமானம் சிறிதும் இல்லாமல், சிலர் ஏதோதோ கூறி



## சேலம் மாவட்டம்:

# அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

சேலம் மாவட்டத்தில் அரசுத் திட்டப்பணிகள் தொடக்கம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 7.3.1993 அன்று பிரம்மாண்டமான அளவில் நடை பெற்றது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு, அனைவராலும் பாராட்டக் கூடிய அளவில், எடுக்கப்பட்ட அவ்விழா வரலாற்றுச் சிறப்புமிக்கதாக அமைந்திருந்தது.

சேலம் மாவட்டத்தின் தொடக்கமான ஆத்தூரி லிருந்தே கண்ணைப் பறிக்கும் அலங்கார வளைவுகளும், தோரணங்களும் முதல்வர் அவர்களை வரவேற்றன.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப் பேற்ற பின், சேலத்தில் கலந்துகொண்ட முதல் நிகழ்ச்சி இதுவேயாகும்.

சேலம் தியாகராய பாலிடெக்னிக் மைதானத்தில் பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டிருந்த பந்தலில், பிற்பகல் 3.00 மணியளவில் விழா தொடங்கியது. விழாவினைக் காண, பந்தலின் உள்ளேயும் வெளியேயும் இலட்சக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.

விழாவிற்கு மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா அவர்கள் தலைமை வகித்தார்.

விழா ஏற்பாடுகளை அதிசயிக்கத்தக்க அளவிற்குச் செய்த மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. செல்வகணபதி அவர்கள் வரவேற்றுப் பேசினார்.

விழாவில், அரசுத் திட்டங்களையும், அண்ணா போக்குவரத்துக் கழகப் புதிய வழித்தடங்களையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கிவைத்தார். புதிய திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டினார். ரூ.353 கோடி மதிப்பீட்டில் அரசுத் திட்டப்பணிகளைத் தொடங்கிவைத்து, நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

இவ்விழாவில், நீலகிரி மாவட்ட மக்கள் 165 பேருக்கு ரூ.11 இலட்சம் மதிப்பீட்டில் நல உதவிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கு, அமைச்சர் பெருமக்களும் மாவட்ட ஆட்சித் தலைவரும் மற்றும் பிரமுகர்களும் நினைவுப் பரிசுகளை வழங் கினார்கள்.

மாண்புமிகு முதல்வர் பெருமக்களும், வாரியத் தலைவர்களும், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர் களும் கலந்துகொண்டு, விழாவைச் சிறப்பித்தனர்.

விழா முடிவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இராமையா அவர்கள் நன்றி கூறினார்.

- என். இளங்கோ.

வருகின்றனர். பெற்றோர்கள், பெண் குழந்தைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் என்னென்னவோ, அவை அனைத்தையும் அரசே ஏற்றுச் செய்ய வேண்டும், என்ற நல்லெண்ணத்தில் தான், இந்தத் திட்டம் உருவாக்கப் பட்டுள்ளது.

அரசு ஏற்கும் இப்பெண் குழந்தை களுக்கு, நல்ல கல்வி அறிவு புகட்டு வதுடன், தங்கள் சொந்தக் காலில் நின்று, தங்களது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் திறமை உடையவர்களாக, அவர்களை உருவாக்கவும், அவர்களது திருமணம் வரை பாதுகாக்கவும், அரசு முடிவு செய்துள்ளது. உதவி கோரி என்னைச் சந்தித்த ஆயிரக்கணக்கான பெண்களின் துயரத்திற்கு, அவர்களின் அறியாமையும், கல்வி அறிவு இன்மை யுமே காரணம் என்பதை, நான் உணர்ந்த தினால்தான் அரசு எடுத்து வளர்க்கும் பெண் குழந்தைகள், நமது சமுதாயத்தில் உயர்ந்த நிலையை எய்தி, உண்மையான பெண்கள் முன்னேற்றம் இது தான் என்று, உலகிற்கு எடுத்துக்காட்டும் வண்ணம், பாரதி கண்ட புதுமைப் பெண்களாக, அவர்களை வளர்க்க வேண்டும் என்று முடிவு செய்தேன். அதற்கிணங்க, இத்திட்டம் வடிவமைக்கப் பட்டு, செயல்படுத்தப்படுகின்றது என் பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எத்தனைத் திட்டங்கள், எந்த அளவு செம்மையுடன் தீட்டப்பட்டாலும், இந்திய நாட்டைப் பொறுத்தமட்டில், இதன் ஜீவ நாடியாக உள்ள கிராமங்களுக்கு, அதன் பலன் சென்றடைந்தால்தான், உண்மை யான வளர்ச்சியை நாம் அடைய முடியும் என்றார், அண்ணல் காந்தி அடிகள். அவரது வாக்கில் நம்பிக்கை கொண்ட அரசாக, நம்முடைய அரசு திகழும் காரணத்தால் தான், வேறெந்த மாநில அரசும் தீட்டாத, தன்னிறைவுத் திட்டத் தைத் தீட்டிச் செயல்படுத்தியுள்ளோம்.

நம்முடைய திட்டத்தின் பயனாக, சின்னச் சின்னக் குக் கிராமங்கள் கூட, இன்று அடிப்படை வசதிகள் அனைத்தை யும் பெற முடிந்துள்ளது. இந்தியா விலேயே, கிராமத் தன்னிறைவுத் திட்டங்களை, சிறப்பாக நிறைவேற்றி யுள்ள மாநிலம், தமிழ்நாடுதான் என்று, மைய அரசே பாராட்டியுள்ளது என் பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஏழை எளிய மக்களின், கல்விக் கண் திறப்பதிலே கவனம் செலுத்தி, பள்ளிச் சிறார்கள் மட்டுமல்லாது, பள்ளி செல்லாத சிறார்கள், வயதுவந்தோர்,



முன்னேற்றம் சம்பந்தப்பட்ட விஷயம் என்பதால், எனது கருத்தை இங்கே கூற வேண்டியது, அவசியம் என்று கருதி, நான் இதையெல்லாம் இங்கே தெரிவிக்கின்றேன். இது போல, மாநில அரசின் உரிமைகள், பறிக்கப்பட்டிருக்கின்ற பல்வேறு துறைகளும் இருக்கின்றன. அவைகளை எல்லாம் எடுத்துச் சொல்ல, இங்கே நேரமில்லை என்பதால், இந்த அளவில் நிறுத்திக் கொள்கின்றேன்.

இன்று - அரிசி விலையைக் கட்டுப் படுத்தக் கூட, எண்ணற்ற பொருளாதாரச் சிரமங்களை, நாம் அடைய வேண்டியுள்ளது. பொது மக்களுக்கு மிகவும் நெருக்கமாக உள்ள மாநில அரசு தான், பதில் கூற வேண்டியுள்ளது. இந்த உண்மை நிலையை, மக்களுக்கு நாம் எடுத்துரைக்கத்தான் வேண்டும். குறிப்பாக, மக்களை நேரடியாகப் பாதிக்கும், அரிசி விலை ஏற்றம் போன்ற சில பிரச்சினைகளையாவது, மாநில அரசைக் கலந்து முடிவெடுங்கள், என நான் விடுத்துவரும் வேண்டுகோள்கள் கூடச், செவிமடுக்கப் படாததால், மாநில அரசு இன்று, மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய நிலைக்கு ஆளாகி உள்ளது.

குறிப்பாக, அண்மையில் ஏற்பட்ட சொல்லொணா வெள்ளச் சேதத்தை, சுற்றுப் பயணம் செய்து பார்த்த பின்பும், வெள்ள நிவாரணமாக, தமிழ்நாடு அரசு கேட்டிருந்த 530 கோடி ரூபாய்க்குப் பதில், மைய அரசு நமக்கு அளித்தது வெறும் 50 கோடி ரூபாய் மட்டும் தான். அதுவும் எப்படி? தமிழ்நாட்டுக்கான அடுத்த ஆண்டு ஒதுக்கீட்டிலிருந்து, முன் பணமாக! இதையெல்லாம் நீங்கள் நன்கு அறிந்துகொள்ள வேண்டும். தமிழகத்தின் நியாயமான கோரிக்கைகள் கூட, எப்படி தோல்விகளைச் சந்திக்கின்றன என்பது, உங்களுக்கு விளங்கவேண்டும் என்பதற்காக, இவற்றைக் கூறுகிறேன்.

இவை போன்ற இடர்ப்பாடுகளையும்-பல்வேறு தடங்கல்களையும் தாண்டித் தான் - சமாளித்துத்தான், சரி செய்து தான், உங்கள் சகோதரியின் அரசு, சாதனைகள் பலவற்றை நிகழ்த்தி வருகிறது!

'தடை பல உண்டெனினும்
தடந்தோள் உண்டென்போம்'

- என்ற பாவேந்தர் கவிதை வரிகளுக்கொப்ப, உங்கள் ஆதரவும் அன்பும் என்றென்றும் உள்ளதால், எப்பேர்ப் பட்ட தடைகளையும் சங்கடங்களையும் தாங்கி, சிரித்த முகத்தோடு, உங்களைக் காண ஓடோடி வந்துள்ளேன்.

அனைவரும் பயிலும் வண்ணம், அறிவொளி இயக்கத்தைத் தீவிரப்படுத்தியதன் பயனாக, ஏழு மாவட்டங்களில், எழுத்தறிவில்லா மக்கள், கல்விக் கண் பெற்றுள்ளனர். இந்த ஆண்டு, உங்கள் சேலம் மாவட்டத்தையும் சேர்த்து, மொத்தம் 10 மாவட்டங்களில், அறிவொளி இயக்கம் தொடர்ந்து நடைபெறுகிறது.

இவ்வளவு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வரும், திறன் மிக்க ஓர் அரசை, உங்கள் பிரதிநிதியாக இருந்து, நான் நடத்தி வந்தாலும், ஆட்சி அமைப்பு முறை காரணமாக நாம் எதிர்நோக்கியுள்ள சில சங்கடங்களையும் தெரிவிப்பது, என் கடமை எனக் கருதுகிறேன்.

இந்தியாவைப் பாதுகாப்பதற்குத் தேவையான அதிகாரங்கள், மத்தியக் கூட்டாட்சியிடத்திலும், மக்களை வாழ வைக்கத் தேவையான அதிகாரங்கள், மாநில அரசுகளிடத்திலும் அமைய வேண்டும். இதற்கேற்ப, அரசியலமைப்புச் சட்டம், திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று, எங்கள் அரசு பொறுப்பேற்ற காலத்திலிருந்தே, வலியுறுத்தி வருகிறது.

மத்திய அரசு அண்மையில், கிராமங்களுக்கு அதிக அதிகாரம் தருகின்ற போர்வையில், மாநில அரசின் உரிமையைப் பறிக்கின்ற வகையில், பாராளுமன்றத்தில் பஞ்சாயத்து ராஜ் மற்றும் நகர் பாலிகா அரசியல் சட்டத் திருத்த மசோதாக்களை, நிறைவேற்றி உள்ளது. கேட்டால், மக்களுக்கு நேரடியாக அதிகாரம் வழங்குவதற்காக,. இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறுகிறார்கள்.

அந்தந்த மாநில மக்களால், பெரும்பான்மையோடு தேர்ந்தெடுக்கப்பட்ட, மாநில அரசைத் தாண்டி, அதிகாரம் வழங்குவது என்பது, என்ன நடைமுறை நியாயம்? இது ஆசிரியர் இல்லாமல், பள்ளிகளில் பாடம் சொல்லி கொடுக்கின்றோம் என்பது போன்ற செயல் மட்டுமல்ல; பரீட்சை எழுதுகின்ற மாணவர்களைக் கண்காணிக்க, ஆசிரியர் தேவையில்லை என்பதைப் போன்ற, ஒரு அவல நிலைமையும் உருவாக்கியுள்ளது.

மேலும், தற்போது தமிழகத்தில் நடைமுறையில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு, உறுப்பினர்களையும், தலைவர்களையும் மக்கள் நேரடியாக வாக்களித்துத் தேர்ந்தெடுக்கும் ஜனநாயக முறையைக் கைவிட்டு, ஏற்கெனவே நடைமுறையில் இருந்து எடுக்கப்பட்டுவிட்ட, பழைய முறையான, உறுப்பினர்கள் மூலம் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறையைப் புகுத்தும் சட்டத் திருத்தமாக அமைந்துள்ளதால், இது மக்களின் உரிமைகளைப் பறிக்கும், பாதிக்கும் என்றே கருத வேண்டியுள்ளது.

இது நமது அரசியல் சாசனத்தின், அடிப்படை தத்துவத்தையே, உடைக்கின்ற முயற்சியாக இருக்கின்றது. அதோடு, மாநில அரசைத் தேர்ந்தெடுக்க, தேர்தலின் போது நிதானமாகச் சிந்தித்து, ஓட்டுப் போட்ட வாக்காளப் பெருமக்களையும், அவர்களது உரிமையையும் சுரண்டுவதோடு, கிராம வளர்ச்சியில் திட்டமிட்டு முன்னேறிக் கொண்டிருக்கும், மாநில அரசின் நோக்கத்தையே சிதறடிக்கும், இரட்டை ஆட்சி முறையைத் தெரிந்தே அறிமுகப்படுத்துகின்ற வீம்புச் சட்டமாகவும், இது இருக்கிறது. கிராம மக்களின்

ஆட்சிப் பொறுப்பேற்ற பின், சேலம் நகரில் நடைபெறும் அரசு விழாவில் கலந்துகொள்ள, இன்று முதல் முறையாக வந்திருக்கின்றேன். சென்ற ஆண்டு இறுதியிலேயே இங்கு வர நான் திட்டமிட்டு இருந்தும், தென் மாவட்ட மக்கள் புயலாலும் வெள்ளத்தாலும் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில், அங்கு செல்ல நேரிட்டதால், அப்போது வர இயலவில்லை. தற்போது தாமதமாக இங்கு வந்து உங்களைச் சந்தித்தாலும், தாராளமாகப் பல திட்டங்களுடன் தான் வந்துள்ளேன் என்பதை அறிந்து, நீங்கள் மகிழ்ச்சி கொள்வீர்கள் என்று நம்புகின்றேன்.



பெண்களின் முன்னேற்றத்திற்குக் கல்வியறிவும் அவரவர்களின் பொருளாதார நிலையில் உயர்வும் மிகவும் முக்கியமானவை. பெண்களை முழுவதும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக மாற்ற ''அறிவொளி இயக்கத்தை'' இந்த அரசு தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறது. அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த ஒருபுறம் திருமண உதவி, மகப்பேறு கால உதவி, இலவச சேலை போன்றவற்றை வழங்குவதோடு, மற்றொரு புறம் அவர்களுக்கு வேலைவாய்ப்பு வசதிகளையும் இந்த அரசு உருவாக்கித் தந்து வருகிறது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் காலம் முதல், இன்று வரை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குச் சேலம் மாவட்ட மக்கள், நிலையான பெரும் ஆதரவினை அளித்து, பல மாபெரும் வெற்றிகளையும் ஈட்டித் தந்துள்ளார்கள். இந்த ஆட்சி அமைவதற்குத் தங்களது அயராத உழைப்பைத் தாரை வார்த்தவர்கள், தங்களது இன்னுயிரை ஈந்தவர்கள், ஓடியாடி உழைத்த செயல் வீரர்கள், எண்ணற்றோரைத் தன்னகத்தே கொண்ட எழுச்சிமிக்க மாவட்டம் தான் சேலம் மாவட்டம் என்பதை, நான் எப்போதும் மறவேன்.

இனியும் அந்த நிகரில்லா ஆதரவினை, தொடர்ந்து எங்களுக்கு நல்குவீர்கள் என்று நம்புகிறேன். உங்கள் மாவட்ட அமைச்சர் அன்புத் தம்பி செல்வகணபதி அவர்கள், மிகமிகச் சிறப்பாக, எனது சுற்றுப்பயணத்தையும், இம்மாபெரும் விழாவினையும் ஏற்பாடு செய்துள்ளமைக்காக, அவரை நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். அவர் துடிப்புள்ள இளைஞர்; கடினமான உழைப்பாளி; ஆற்றல் மிக்கவர். எப்பொழுதும் பொறுப்புடன் செயல்படக் கூடியவர். மக்கள், மனதில் என்ன நினைக்கிறார்கள் என்பதைச் சரியாகக் கணித்துக் கருத்துக் கூறுபவர். கசப்பான செய்திகளானாலும், கழகத்தையும், அரசையும் கட்டிக் காப்பதே, தன் தலையாய கடமை என்று கொண்டு, தயங்காது என்னிடம் தெரிவிக்கும் தைரியம் கொண்டவர்.

பலர் என்னைத் திருப்திப்படுத்த வேண்டும் என்பதற்காக, சில குறிப்பிட்ட நல்ல செய்திகளையே என்னிடத்தில் தெரிவிக்கின்றார்கள். கசப்பான செய்திகள் மிக முக்கியமானவை என்றால் கூட, என்னிடம் சொல்லாமல் சென்றுவிடுகிறார்கள். தம்பி செல்வகணபதி அப்படிப்பட்டவர் அல்ல; தயக்கமின்றித் தன் கருத்துக்களை, என்னிடம் கூறுகின்றார் என்பது மட்டுமல்ல, அவர் கூறும் கருத்துக்கள் எப்பொழுதும், அறிவுபூர்வமானதாகவும், மக்களின் மன நிலையைச் சரியாகப் பிரதிபலிப்பதாகவும் அமைந்தே இருக்கும்.

உங்கள் மாவட்ட அமைச்சர் இத்தகைய அறிவாற்றல் காரணமாகத் தான், மிகக் குறுகிய காலத்திலேயே பல உயர்வுகளைப் பெற்றார். இவரது தகுதிகளையும், திறமைகளையும் அடையாளம் கண்டுதான், நான் இவருக்குக் கழகத்தின் இளைஞர் அணி மாவட்டச் செயலாளர் பொறுப்புக் கொடுத்தேன். அதனைத் தொடர்ந்து, சேலம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளராக உயர்வு பெற்றார். பின்னர் சட்டமன்ற உறுப்பினராகி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவையில், தன் இளம் வயதிலேயே இடம் பெற்றார். தன் பணிகளை மிகவும் சிறப்பாகவும், செம்மையாகவும் செய்து வருவதோடு, நான் ஏற்கெனவே தெரிவித்த சிறப்பு இயல்புகளையும் கொண்டவராகத் திகழ்ந்தார்.

இருந்தும், சகோதரர் செல்வகணபதி அவர்களுக்குத் தெரிந்த, ஒரே திராவிட இயக்கத் தலைவி, நான்தான். என்னைத் தவிர வேறு எந்தத் தலைவரையும் அவருக்குத் தெரியாது. தான் கொண்ட தலைமைக்கு என்றென்றும் உண்மையானவர், என்ற சிறப்புக்கும் உரியவராகத் திகழ்கிறார்.

இனிய பண்பும், செயல்திறனும், கொண்ட கொள்கையில் உறுதியும், விசுவாசமும் மிக்க சகோதரர் செல்வ கணபதி அவர்களுக்குச் சிறந்த ஒளி மயமான எதிர்காலமும், வளமான பல உயர்வுகளும் உண்டு என்பதைத் தெரிவித்து, அவரைப் பெரிதும் பாராட்டுகின்றேன்.

சென்னையில் இருந்து, சேலம் வரை நான் பயணம் செய்த சாலையின் இருமருங்கிலும், நீண்ட நேரமாக என் வருகைக்காகக் காத்து நின்று, என்னைக் கண்டவுடன், உணர்ச்சிப் பெருக்கோடு வாழ்த்தி வரவேற்ற மக்கள் ஒவ்வொருவருக்கும், என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கை ஆக்குகின்றேன்.

நான் பல்வேறு தரப்பு மக்களின் பாசத்திற்கு உரியவள். ஜாதி, மத உணர்வுகள் எனக்குக் கிடையாது. அதைத் தெள்ளத் தெளிவாக, என் அன்பிற்குரிய உங்களின் முன்னே, தெளிவாக்கக் கடமைப்பட்டுள்ளேன். எவரிடமும் எனக்குப் பகை உணர்வு இல்லை. அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, என் மீது அவதூறைப் பரப்புபவர்கள், நான் சில பிரிவினர் மீது எதிர்ப்புக் கொண்டிருப்பதாக, சுயலாப நோக்கத்துடன், பொய்ப் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். மக்கள் என் பக்கம் இருப்பதால், இதிலும் இறுதி வெற்றி எனக்குத்தான் என்பதை, என்னை எதிர்ப்பவர்கள் தெரிந்து கொள்ளும் நாள், வெகு தூரத்தில் இல்லை.

இந்நாட்டு மக்கள் யாராக இருந்தாலும், எல்லோரும் எனக்கு ஒன்றுதான். அவர்கள் ஒவ்வொருவரும் என் அன்பிற்குரிய சகோதரர்கள் தான்! சகோதரிகள் தான்! இதில் எவ்வித மாற்றமும், எப்போதும் இருக்காது.

எங்கள் பாதையும் பயணமும், சத்திய சோதனைகள் பலவற்றை வென்ற அண்ணாவுடையன! புரட்சித் தலைவருடையன! அந்தத் திராவிட தீபங்கள் காட்டும் ஒளி வழியே, வீறுநடை பயின்று, வெற்றி பெறுவோம், என்ற உறுதியை ஏற்று விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

## ஏழை எளிய மக்களின் சிரிப்பிலே வாழ்வின் அர்த்தத்தையே காண்கிறேன்!

# தருமபுரி மாவட்ட அரசு திட்டப் பணிகள் தொடக்க விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை

**வ**ரலாற்றுச் சிறப்பும் சரித்திரப் பெருமையும் மிக்க, தருமபுரி மாவட்டத்தின் மக்களாகிய உங்கள் அனைவரையும், மீண்டும் சந்தித்துப் பேசி மகிழ்வதில், பெருமகிழ்ச்சி அடைகின்றேன். தமிழ்நாட்டை ஆளுகின்ற முதலமைச்சர் என்கின்ற உயர்ந்த நிலை எனக்குக் கிடைத்து இருந்தாலும், தமிழகச் சட்டமன்றத்திற்கு, என்னை அனுப்பி வைத்த பெருமை, இந்த மாவட்டத்தைச் சார்ந்த பர்கூருக்கு உண்டு என்பதை, நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

தமிழர் வாழ, அவ்வைக்கு நெல்லிக்கனி ஈந்து, நம் இதயத்தில் இன்றைக்கும், ஏன், என்றைக்கும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற, அதியமான் வாழ்ந்த மண் இது. சுதந்திர வேள்வியில், தங்களைப் புடம் போட்ட தங்கங்களாக மாற்றிக் கொண்ட, சுப்பிரமணிய சிவாவும், மூதறிஞர் ராஜாஜியும், வாழ்ந்து மகிழ்ந்த வரலாற்று ஸ்தலம் இது.

ஆனால், நான் தேர்தலில் நிற்பதற்கு, இந்த மாவட்டத்தை ஏன் தேர்ந்தெடுத்தேன் என்றால், அதற்கு இவையெல்லாம் காரணங்கள் அல்ல. தமிழ்நாட்டிலேயே, மிகவும் பிற்பட்ட பகுதியாக, பின்தங்கிய

மக்களைக் கொண்ட மாவட்டமாக, ஏழைகள் நிறைந்த இடமாக, இந்தப் பகுதி இருந்ததால் தான், அவர்களுக்கு உதவுகின்ற வகையில், என்னாலான பணிகளை, என் சக்திக்கு இயன்ற அளவில், செய்து கொடுக்க வேண்டும் என்ற ஆர்வத்தோடு தான், நான் பர்கூரைத் தேர்ந்தெடுத்தேன். அந்த வகையில் இதுவரை, இந்தத் தொகுதியின் வளர்ச்சிக்கும், இம் மாவட்டத்தின் வளர்ச்சிக்கும் பெரிதும் உதவியுள்ளேன்.

முதல் அமைச்சராகப் பொறுப்பேற்ற பின்பு, நான் முதன்முதலாகப் பர்கூருக்கு வந்தபொழுது, 34 கோடி ரூபாய்க்கான திட்டங்களை அளித்துவிட்டுச் சென்றேன். இதில் குறிப்பாக, தமிழ்நாடு கனிம நிறுவனத்தின், கருங்கல் மெருகூட்டி உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை, 15 கோடி ரூபாய் செலவில் அமைக்கும் பணிக்கு, அன்று நான் அடிக்கல் நாட்டினேன். இன்று அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு, புதிய தொழிற்சாலை இயங்கும் தறுவாயில் உள்ளது என்பதை, மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், நான் இரண்டாம் முறையாகப் பர்கூருக்கு உங்களைக் காண வந்தபொழுது, 22 கோடி ரூபாய் செலவில், பெண்களுக்கெனத் தனியாக, ஒரு புதிய கூட்டுறவு நூற்பாலை ஏற்படுத்துவதற்கு, அடிக்கல் நாட்டினேன். அந்த நூற்பாலையின் பூர்வாங்கப் பணிகள் முடிந்து, இடம் தேர்வு செய்யப்பட்டு, அதன் பணிகள் விரைவில் தொடங்க இருப்பதை, நான் மகிழ்ச்சியோடு உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிற அதே நேரத்தில், எனக்கு முன்னால் மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் அவர்கள் இந்தத் தகவலை ஏற்கெனவே உங்களுக்குத் தெரிவித்திருக்கிறார். இந்த நூற்பாலையைத் தொடங்க நேரடியாக நான் மீண்டும் வரவேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார். இதற்காக வேண்டுகோள் விடுக்க வேண்டிய அவசியமே இல்லை. இந்த நூற்பாலையைத் தொடங்குவதற்குக் கட்டாயமாக நான் வருவேன் என்பதை இந்த நேரத்தில் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று மூன்றாம் முறையாக உங்களைச் சந்திக்க நான் வந்திருக்கின்றேன். தருமபுரி மாவட்டம் பயன்பெறும் வகையில் இன்று,

- 141 கோடி ரூபாய் மதிப்புள்ள, பல கட்டுமான பணிகளுக்கும், திட்டங்களுக்கும், அடிக்கல் நாட்டி உள்ளேன்.

- 49 கோடி ரூபாய் மதிப்புள்ள, புதிய கட்டடங்களைத் திறந்து வைத்துள்ளேன்.

- 37 கோடி ரூபாய் மதிப்புள்ள, புதிய திட்டங்களைத் தொடங்கி வைத்துள்ளேன்.

- 11 கோடி ரூபாய் மதிப்புள்ள, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிட உள்ளேன்.

ஆக, மொத்தம் 238 கோடி ரூபாய் மதிப்புள்ள பணிகளுக்கு, இங்கே, இன்று அடிக்கல் நாட்டியதிலும், புதிய திட்டங்களைத் தொடங்கி வைத்ததிலும், கட்டடங்களைத் திறந்து வைத்ததிலும், நான் எனது மகிழ்ச்சியை, உங்களோடு சேர்ந்து பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

அரசு எத்தனை உதவிகள் செய்தாலும், இயற்கையே நமக்கு எதிரியாக, சில சமயங்களில் இருப்பது, தவிர்க்க முடியாதது. வறட்சி, ஒவ்வொரு ஆண்டும் மக்களது வாழ்வை, திசை மாற்றிவிடுகிறது. வெள்ளம், சாதாரண மக்களின் பொருளாதார ஸ்திரத்தன்மையை, சீர்குலைக்கின்றது. இப்படி இயற்கைச் சீற்றங்களினால் மக்கள் பாதிக்கப்படுகின்ற நேரத்தில், ஓடோடி வந்து உதவிக்கரம் நீட்டுவது தான், உங்கள் அரசு. எப்படிப்பட்ட நிதிநிலை நெருக்கடியிலும், ஏழை எளியோர் நலன் பெறும் திட்டங்கள், சிறிதும் தொய்வில்லாமல் தொடரச் செய்து வருவது தான், உங்கள் அரசு.

மரங்கள் பூமியின் மிகச் சிறந்த செல்வம், மரங்கள் அழிவதால், மனித குலத்துக்கே தீங்கு விளையும் என்பது, நடைமுறை உண்மை. காடுகள் மிகுதியாக இருக்கின்ற இடத்தில் தான், மழை அதிகமாகப் பெய்யும்;

சுற்றுச் சூழல் தூய்மையாக விளங்கும். எனவே, காடுகளை அழிப்பவர்கள், மக்களின் எதிரிகள் என்பதை, நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். அவர்களின் அராஜகச் செயலுக்கு, உதவுபவர்களைத் தடுத்து நிறுத்த, நீங்கள் முன்வர வேண்டும்.

தருமபுரி மாவட்டத்தில், தொழில்களுக்கு நல்ல எதிர்காலம் உள்ளது. தொழில் துறையில் கல்வி அறிவு, நல்ல பலனைத் தரும். வேளாண்மையையே முழுதும் நம்பியுள்ள நீங்கள், தொழில்கள் தொடங்கவும் முன்வர வேண்டும். அந்த வகையில் உங்கள் பிரதிநிதியான நான், உங்களுக்கு உதவ எப்போதும் காத்திருக்கின்றேன். உங்களை ஆர்வத்தோடு நான் வரவேற்கிறேன். முதலமைச்சரைப் பயன்படுத்திக் கொள்ள நிறைய பேர் ஆர்வமாக உள்ளார்கள். ஆனால், உங்களைப் பொருத்தமட்டில், உங்களைப் பயன்படுத்த, முதலமைச்சர் ஆர்வமாக இருக்கின்றார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது வேறு எந்தத் தொகுதிக்கும் கிடைக்காத அரிய வாய்ப்பு. இதனை நீங்கள் அனைவரும், தவறாது பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக அரசு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். வழிவந்த மக்கள் அரசு. இதுவரை ஆட்சி செய்தவர்களைப் போல, பழங்கதை பேசாமல், மக்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட, ஆழ்ந்து சிந்தித்து, ஆய்ந்து அறிந்து, திட்டங்களைத் தீட்டுகின்ற அரசாகத் திகழ்கிறது, எங்கள் அரசு. அந்தத் திட்டங்கள் தான், இன்று செயல்வடிவம் பெற்று, சாதனைகளாக மலர்ந்துள்ளன.

இந்தத் திட்டங்கள் அனைத்துமே, மக்களின் நல்வாழ்வினைத், தங்களது நியாயமான மைய நோக்கமாகக் கொண்டவை. பொது மக்களின் எல்லா வாழ்வு நிலைகளையும், அம்சங்களையும், குறைபாடுகளையும் சரி செய்து, அவர்களை மேம்படுத்துவதற்காக, எங்கள் அரசு எடுத்துக் கொண்ட முயற்சிகளும், அடைந்த சாதனைகளும், எண்ணில் அடங்கா என்பதை, நீங்கள் நன்கு அறிவீர்கள்.







## தருமபுரி மாவட்டத்தில் அரசு நலத்திட்ட உதவி வழங்கும் விழா

தருமபுரி மாவட்டத்தில் ரூ.238 கோடி செலவில் அரசு திட்டப் பணிகள் தொடக்க விழாவும், நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவும் பிரம்மாண்டமான அளவில் 8.3.93 அன்று நடைபெற்றது.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் சொந்தத் தொகுதியான பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள ஒரப்பம் கிராமத்தில் நடைபெற்ற இந்த விழாவிற்கென பிரம்மாண்டமான பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாலை நான்கு மணிக்கு வந்தார். மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா அவர்கள் தலைமை வகித்தார். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் வரவேற்றுப் பேசினார்.

விழாவில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு. முத்துசாமி, திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு மதுசூதனன், திரு. கண்ணப்பன், திரு. அழகு திருநாவுக்கரசு, திரு. செல்வகணபதி, திருமதி இந்திர குமாரி, திரு. ரகுபதி ஆகியோர் கலந்துகொண்டனர்.

பின்னர் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் அவர்கள், தருமபுரி மாவட்டத்திற்கு ரூ.237 கோடியே 73 இலட்சம் மதிப்பீட்டிலான திட்டங்களைத் தொடங்கிவைத்தார்.

மேடையில் இருந்த ஒரு பொத்தானை அவர் அழுத்தியதும் புதிய திட்டங்களுக்கான அடிக்கல்லை மூடி இருந்த திரை விலகியது. அப்போது மக்கள் கைதட்டி பலத்த மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

பின்னர் நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார். அதைத் தொடர்ந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு ஏராளமான நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

நாட்டின் இருதயம் போன்ற கிராமங்களில் ஆரம்பித்து, ஊரக வளர்ச்சிக்கான திட்டங்கள், கிராமங்களுக்கான அடிப்படை வசதிகள், கல்வித் திட்டங்கள், ஏழை எளியோருக்கான நலத் திட்டங்கள், போன்றவற்றைச் செயலாக்கினோம்;

மகளிர் உட்பட வேலை வாய்ப்பற்றோருக்கு, சுய வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தந்தோம். எழுத்தறிவில்லாதவர்களுக்கு, அறிவொளி இயக்கத்தின் மூலம் அறிவூட்டினோம். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும், தன்னிறைவு அடையச் செய்தோம். நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம், நகர்ப்புறங்கள் அடிப்படை வசதிகளைப் பெறச் செய்தோம். தற்போது, தொழில் வளர்ச்சி காண்பதன் மூலம், பொருளாதார முன்னேற்றத்தின், முதற் கட்டத்தைத் தாண்டி உள்ளோம்.

முறைப்படுத்தி வகைப்படுத்தி வகுத்த, இச்சீரிய திட்டங்கள் மூலம், அனைத்துத் துறைகளிலும், தமிழ் நாடு வெற்றி கண்டு வருகிறது. இதைக் கண்டு பொறுக்க முடியாத சிலர், பொறாமையால், புரட்டுக்களை அள்ளி வீசுகிறார்கள். கோடிக் கணக்கான தமிழக மக்களாகிய உங்கள் ஆதரவும், அன்பும் இருக்கும் வரை, தீயசக்திகளின் ஓலங்களும், மாய்மாலங்களும், ஒருபோதும் எடுபடாது.

சட்டம் ஒழுங்கோடு, அமைதி தவழுகின்ற தமிழ்நாடு, மத இன காழ்ப்புணர்ச்சிக்கு அப்பாற்பட்ட மாநிலம், சுயலாபத்திற்காகப் பொய்யை விற்று, தன் மக்களையும், மாநிலத்தையும் காட்டிக் கொடுக்கின்ற, சமூக விரோதிகளின் முயற்சிகள், இந்தத் தமிழ் மண்ணில் எடுபடாது என்பதை, இந்த நேரத்தில் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். 5.5 கோடி தமிழக மக்களின் அரசு இது. உங்கள் நலனுக்காகச் செயல்படுத்தப்படும் திட்டங்களில், ஒளிமறைவு கிடையாது.

தமிழ்நாட்டுக்கும், தமிழக மக்களுக்கும், தமிழ் மொழிக்கும், தீங்கு ஏற்படுகின்ற நிலை வரும் போது, நாங்கள் போர்க்கொடி உயர்த்தவும் தயங்க மாட்டோம்; இதில் எந்தவிதச் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கும் சிறிதும் இடமில்லை. பிறந்த மண்ணைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, 'நீ பெரியவனா? நான் பெரியவனா?' என்று போட்டி போட்டுக் கொள்பவர்களுக்கு, தமிழகத்தில் என்றும் இடமில்லை. மக்கள் பணி ஆற்றுபவர்களை, வீழ்த்த நினைப்பவர்கள், என்றும் வென்றது இல்லை.

பொது வாழ்வு என்பது மக்கட் பணி. அந்தப் பணியை யார் உண்மையாகச் செய்கின்றார்கள் என்பதும் மக்களுக்குத் தெரியும். உண்மையிலேயே தங்களுக்காகப் பாடுபடுபவர்கள் யார் என்பதை, தமிழக மக்கள் நன்கு அறிந்து வைத்திருக்கிறார்கள். அதனால் தான், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், ஆட்சிப் பொறுப்பேற்றது; சாதனை மேல் சாதனையாக, வெற்றிகளைக் குவித்துக் கொண்டிருக்கிறது!

மக்கள் சக்தி என்ன என்பது, புரட்சித் தலைவருக்கும் எனக்கும், மற்றவர்களைவிட மிக நன்றாகவே தெரியும். அந்த மகா சக்தி தான் எனக்குப் பேராதரவாய், பக்க பலமாய், ஊக்கப் பொருளாய் இருக்கின்றது, என்பதை எண்ணும் போது, பெருமிதமும், பூரிப்பும் அடைகின்றேன்.

எனது தருமபுரி மாவட்டச் சுற்றுப் பயணத்தையும், பர்கூர் தொகுதியில் இந்த மாபெரும் விழாவினையும், மிகவும் சிறப்பாக ஏற்



பாடு செய்து கொடுத்துள்ள, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களான திரு. செங்கோட்டையன், திரு. கண்ணப்பன், திரு. அழகு திருநாவுக்கரசு மூவருக்கும் என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். பர்கூர் தொகுதியின் வளர்ச்சிப் பணிகள், தொய்வின்றி நடந்திட வேண்டும் என்பதற்காக, நான் அடிக்கடி அவர்களையும், அண்ணன் எஸ்.டி.எஸ். அவர்களையும் அனுப்பி வைத்து, இங்கே பல நல்ல பணிகளை நிறைவேற்றியுள்ளேன்.

நான் என்ன பணி சொன்னாலும், சொன்ன வேகத்தில் செய்து முடிக்கும் திறமை மிக்க செயல் வீரர்கள் அவர்கள். இயக்கத் தொண்டர்களிடம் பிணைப்பும், பொதுமக்கள் பிரச்சினைகளில் ஈடுபாடும் கொண்டு, ஓய்வுறக்கமின்றி அவர்கள் சிறந்த முறையில் பணியாற்றி வருவதை, நான் பாராட்டுகின்றேன். அவர்களின் செயல் திறத்தால், இன்று பர்கூர் தொகுதியில் இச்சீர்மிகு விழா, சிறப்புடன் நடந்தேறியுள்ளது. அதற்காக, இத்தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், அவர்களுக்கு எனது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அண்ணன் எஸ்.டி.எஸ் அவர்கள், இப்பகுதியில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் போதெல்லாம், தவறாமல் பர்கூருக்கு வந்து, எனது சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்கும் சென்று, இத்தொகுதியின் வளர்ச்சிப் பணிகளில் தனிக் கவனம் செலுத்தி, மிகுந்த அக்கறை காட்டி வருகிறார். அதற்காக, அண்ணன் எஸ்.டி.எஸ். அவர்களுக்கு, நான் பெரிதும் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



இத்தொகுதியின் நலனில், மிகுந்த அக்கறையோடு பணியாற்றி வரும், மாவட்ட ஆட்சித் தலைவர், மற்றும் அரசு அலுவலர்கள் அனைவருக்கும், எனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்றாரே, பேரறிஞர் அண்ணா; இன்று நான், ஏழை எளிய மக்களின் சிரிப்பிலே, வாழ்வின் அர்த்தத்தையே காண்கின்றேன். அவர்களது மகிழ்ச்சியில், எங்கள் அரசின் நோக்கத்தையும், அதன் நிறைவையும் காண்கின்றேன். அந்த மகிழ்ச்சியை ஏழை எளியவர்களிடம், நிரந்தரமாக நிலைக்க வைப்பதே, எனது தலையாய கடமையாகும். என்று உணர்ந்தவள் நான்.

அந்த நம்பிக்கையை எந்நாளும், உங்களுக்கு வழங்குகின்ற உங்கள் சகோதரியாக, உங்கள் பிரதிநிதியாக, உங்களுக்காக, அல்லும் பகலும் அயராமல், உறங்காமல், தொடர்ந்து பாடுபடுவேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



# ''கலைகளையும், கலைவித்தகர்களையும் என்றென்றும் கட்டிக்காப்பேன்!''

## 'கலைமாமணி' விருது வழங்கும் விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் நடத்திடும் விழாக்களில் தலைசிறந்து விளங்குவது, 'கலை மாமணி' விருது வழங்கும் விழா வாகும். இயல், இசை, நாடக, நாட்டிய, திரைப்பட, ஊரகக் கலைகளில் புகழோடு விளங்கிய பழம்பெறும் கலைஞர்களுக்கும், புகழோடு விளங்கிடும் இன்றைய இளம் கலைஞர்களுக்கும் தமிழக அரசின் சார்பில் மன்றம் விருது வழங்கிச் சிறப்பிக்கிறது. இந்த வரிசையில் 1992-93-ஆம் ஆண் டின் 'கலைமாமணி' விருது வழங் கும் விழா 11.3.93 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் விழா வில் கலந்துகொண்டு மறைந்த கலை மேதைகளின் திருவுருவப் படங் களைத் திறந்துவைத்து, விருது பெறும் கலைஞர்களுக்குக் 'கலை மாமணி' பட்டமும், நலிந்த கலைஞர் களுக்குப் பொற்கிழியும் வழங் கினார். மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண்சிங் அவர்கள் விழாவில் கலந்துகொண்டு விருது பெற்ற கலைஞர்களுக்குப் பொன்னா டையும், பொற்பதக்கமும் வழங் கினார்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் தலைவர் திரு.குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள் முன்ன தாக வரவேற்புரை நிகழ்த்திப் பேசுகையில், ''நீண்ட நெடுநாட் களாகக் கலைத்துறைக்குச் சேவை செய்தவர்களுக்கு இதுநாள் வரை கொடுக்கப்படாமல் இருந்தவந்த கலைமாமணி விருது, இன்று நமது முதல்வர் அவர்களால் வழங்கப் படுவது குறிப்பிடத்தக்கதும் பெரு மைக்குரியதுமாகும்'' என்றார்.

பின்னர் மேதகு ஆளுநர், மாண்புமிகு முதல்வர், மாண்புமிகு கல்வி அமைச்சர் ஆகியோருக்கு மன்றத்தின் சார்பில் பொன்னாடைகள் போர்த்தப்பட்டன.

மன்றத்தின் உறுப்பினர்-செய லாளர் திரு. ஆர்.எஸ். மனோகர் அவர்கள் அறிக்கை வாசித்தார்.

விழாவிற்குத் தலைமையேற்று மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் செ. அரங்கநாயகம் அவர்கள் பேசுகையில், ''கலைகள் வீழ்ச்சி அடைவதற்குக் காரணம் கலைஞர்

இந்த இசைக் கலையையும், ஆடற் கலையையும், சிற்பக் கலையிலும், ஓவியக் கலையிலும், போற்றி வளர்த்த ஒரு புகழ் மிக்க மரபு, நம் தமிழ் மரபு. ஆலயங்களும், ஆலயம் சார்ந்த இடங்களும், இந்த அரிய உண்மைக்கு, அற்புதமான சான்றுகளாக இன்றும் திகழ்கின்றன.

இப்படிப்பட்ட முத்தமிழை முறையாகக் காப்பதில், தமிழர்களுக்கு எவ்வளவு பொறுப்பு இருக்கின்றதோ, அவ்வளவு பொறுப்பு தமிழக அரசுக்கும் இருக்கின்றது.

ஆண்டுதோறும், கலைமாமணி விருது வழங்கி, உணர்ச்சி பூர்வமாக முத்தமிழ் வல்ல பெருமக்களுக்கு ஊக்கம் அளிக்கின்றோம்; அதனால் நாம் உவகையடைகின்றோம். கலைக்கு, கற்றவர், கல்லாதவர் என்ற பேதமில்லை. ஆகவே தான், இந்த மண்ணிலே மலர்ந்து, மணம் பரப்பி வருகின்ற, நாட்டுப்புறக் கலைகளுக்கும், நாட்டுப்புறக் கலை வித்தகர்களுக்கும், அதே சிறப்பை நாம் செய்து வருகிறோம்.


தமிழரசு

16-4-93 இதழ்

தென்னார்க்காடு மாவட்டச் சிறப்பிதழாக மலர்கிறது!

- அரசு ஆற்றி வரும் அரும் பணிகளின் தொகுப்பு!

மற்றும்

- சிந்தைக்கு விருந்தூட்டும் சிறுகதை!
- கருத்தைக் கவரும் கட்டுரைகள்!
- கற்கண்டாய் இனிக்கும் கவிதைகள்!
- பக்கத்துக்குப் பக்கம் படங்கள்!

தமிழரசு

படிக்க — பயன்பெற — பாதுகாக்க


தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், இந்தச் சீரிய பணியில் ஈடுபட்டிருப்போரைத் தெரிந்தெடுத்து, அவர்களுக்குக் காலத்தோடு நன்றி செய்கிற கடமையைச் செய்து வருகிறது. அந்த வகையில், இன்று 42 முத்தமிழ் வித்தகர்கள், 'கலைமாமணி' விருதினையும், வறுமையில் வாடிக்கொண்டிருக்கும், 5 கலைமாமணி விருது பெற்றவர்கள், 'பொற்கிழியும்' பெறுகின்றார்கள்.

கடந்த ஆண்டு, சகோதரர் ஆர்.எஸ். மனோகர் அவர்கள் விடுத்த வேண்டுகோளின் பயனாக, கலைஞர்களுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை, 250 ரூபாயிலிருந்து உயர்த்தப்பட்டு, 400 ரூபாயாக வழங்கிட நான் ஆணையிட்டேன். எனக்கு நன்றாகத் தெரியும்; வறுமையை 'நடித்துக் காட்டுவது மட்டுமல்ல, அதை அனுபவித்து உழலும், பல்வேறு கலைஞர்கள் நம் நாட்டில் இருக்கின்றார்கள் என்று. இவர்களுக்கு என்ன உதவி செய்யலாம் என்பதைச் சிந்தித்து, அரசுக்குச் சொல்கின்ற அவசியமும் கடமையும், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திற்கு உள்ளது என்பதை, இந்தத் தருணத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கலைஞர்களின் வழிகாட்டியாக, கலைஞர்களுக்கு உதவுகின்ற நிழல் மரமாக இருந்த, இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வழியில் நடக்கும் நான், கலைகளையும், கலை வித்தகர்களையும், என்றென்றும் கட்டிக் காப்பேன் என்பதை, இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று கலைமாமணி விருது பெறுகின்ற பெருமக்கள் அனைவருக்கும், பொற்கிழி பெறும் வித்தகர்களுக்கும், சுழல்கேடயம் பெறும் நாடகக் குழுவினருக்கும், கேடயம் பெறும் கலை நிறுவனத்தினருக்கும், எனது மனமார்ந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தனது சீரிய பணியை மேலும் தொடர வேண்டும் வளர வேண்டும் என வாழ்த்தி, விடை பெறுகிறேன்.

மேதகு தமிழக ஆளுநர் திரு.பீஷ்ம நாராயண்சிங் அவர்கள் பேசுகையில், " தமிழகம் இயல் இசை நாடக மன்றத்துறையில் போற்றத்தக்க பாரம்பரியக் கலாச் சாரத்தைக் கொண்டுள்ளது. தமிழகம் பல சிறந்த கலைஞர்களை உருவாக்கியுள்ளது. இந்தக் கலைஞர்கள் ஆற்றியுள்ள பணிகள் குறுகிய எல்லைகளை எல்லாம் கடந்து பல இடங்களுக்கும் பரவி, தமிழ்நாட்டின் கலையம்சங்களை இந்தியாவின் மற்ற இடங்களுக்கும் பரப்பி நல்ல வரவேற்பைப்பெற்றுள்ளன"என்றார்.

பின்னர் பல்வேறு கலைத் துறைகளைச் சேர்ந்த 42 முத்தமிழ் வித்தகர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் 'கலைமாமணி' விருதும், 'கலைமாமணி' விருது பெற்ற 5 நலிந்த கலைஞர்களுக்குப் பொற்கிழியும் வழங்கினார். மேதகு ஆளுநர் அவர்கள் இந்த கலைஞர்களுக்குப் பொன்னாடையும், பொற்பதக்கமும் வழங்கிச் சிறப்பித்தார். மேலும் சிறந்த நாடகக் குழுவுக்கான சுழற் கேடயத்தைக் 'கிரேஸி கிரியேஷன்ஸ்' குழுவுக்கும், சிறந்த கலை நிறுவனத்துக்கான விருதினை, சென்னை நாரதகான சபாவுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

விழா முடிவில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றச் செயலாளர் திரு ஆர்.எஸ். மனோகர் நன்றி கூற விழா இனிதே முடிந்தது.

- நிகழ்ச்சித் தொகுப்பு: -
ஜே. சந்திரன்.

## கலைமாமணி விருதுபெற்ற கலைஞர்கள்

| | |
|---|---|
| திரு. பகீரதன் | இயற்றமிழ்க் கலைஞர் |
| திரு. ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன் | இயற்றமிழ்க் கலைஞர் |
| திரு. எஸ்.என். ஸ்ரீராமதேசிகன் | இயற்றமிழ் ஆராய்ச்சிக் கலைஞர் |
| திரு. சேலம் டி. செல்லம் அய்யங்கார் | இசைக் கலைஞர் |
| திரு. திருச்சூர் வி. இராமச்சந்திரன் | இசைக் கலைஞர் |
| திரு. வி.வி. சுப்பிரமணியம் | வயலின் கலைஞர் |
| திரு. இராமநாதபுரம் எம்.என். கந்தசாமி | மிருதங்கக் கலைஞர் |
| திரு. மாயவரம் ஜி. சோமசுந்தரம் என்கிற மாயவரம் சோமு | கஞ்சிராக் கலைஞர் |
| திரு. ஆனையாம்பட்டி எஸ். கணேசன் | ஜலதரங்கக் கலைஞர் |
| திரு. சீர்காழி எஸ். திருஞானசம்பந்தம் | இறையருட் பாடற் கலைஞர் |
| திரு. சேங்காலிபுரம் பி.என். இராமமூர்த்தி தீட்சிதர் | சங்கீத உபன்யாசக் கலைஞர் |
| திரு. பத்தமடை எம். ராஜா | நாதசுரக் கலைஞர் |
| திரு. சேஷம்பட்டி டி. சிவலிங்கம் | நாதசுரக் கலைஞர் |
| திரு. பெரும்பள்ளம் பி. வெங்கடேசன் | தவில் கலைஞர் |
| திருமதி கிருஷ்ணகுமாரி நரேந்திரன் | பரதநாட்டிய ஆசிரியர் |
| திரு. டி.எஸ். கதிர்வேல் (பம்பாய்) | பரதநாட்டிய ஆசிரியர் |
| செல்வி லெட்சுமி விசுவநாதன் | பரதநாட்டியக் கலைஞர் |
| திருமதி ஆர். கௌரி | பரதநாட்டிய இசைக் கலைஞர் |
| திரு. டி.பி. வேணுகோபால் பிள்ளை | பரதநாட்டிய மிருதங்கக் கலைஞர் |
| திரு. மெரீனா (ஸ்ரீதர்) | நாடக ஆசிரியர் |
| திரு. டி.பி. சாமிக்கண்ணு | நாடக நகைச்சுவைக் கலைஞர் |
| திரு. தில்லை ராஜன் | நாடகத் தயாரிப்பாளர் |
| திரு. எஸ்.ஆர். தசரதன் | நாடக நடிகர் |
| திருமதி டி.ஆர். லதா | நாடக நடிகை |
| திரு. பிரேமாலயா ஆர். வெங்கட்ராமன் | திரைப்படத் தயாரிப்பாளர் |
| திரு. ஜி.ஆர். நாதன் | திரைப்பட இயக்குநர் |
| திரு. நிழல்கள் எஸ். ரவி | திரைப்பட நடிகர் |
| திருமதி ரேவதி | திரைப்பட நடிகை |
| திரு. கே.கே. சௌந்தர் | திரைப்படக் குணச்சித்திர நடிகர் |
| திரு. ஏ.எஸ். பிரகாசம் | திரைப்பட வசனகர்த்தா |
| செல்வி சச்சு | திரைப்பட நகைச்சுவை நடிகை |
| திரு. எஸ். இராஜேஸ்வர ராவ் | திரைப்பட இசையமைப்பாளர் |
| திரு. ஏ.எல். ராகவன் | திரைப்படப் பின்னணி பாடகர் |
| திரு. என். சுப்பிரமணிய தம்பிரான் | தெருக்கூத்துக் கலைஞர் |
| திருமதி கொல்லங்குடி கருப்பாயி | கிராமிய இசைக் கலைஞர் |
| திருமதி டி. லட்சுமி | கரகாட்டக் கலைஞர் |
| திரு. பி.எஸ். மணிமுத்து பாகவதர் | பழம்பெரும் இசை நாடகக் கலைஞர் |
| திரு. சேந்தமங்கலம் எஸ்.வி. பாலசுப்பிரமணியம் | இசை நாடக நடிகர் |
| திருமதி டி.எம். பங்கஜா | இசை நாடக நடிகை |
| திரு. எம்.எஸ். வெங்கடாசலம் | இசை நாடக ஆர்மோனியக் கலைஞர் |
| திரு. எஸ்.ஆர். வீரராகவன் | தொழில்முறை அல்லாத நாடக நடிகர் |
| திரு. எம்.எஸ். சிவப்பிரகாச ஸ்தபதியார் | சிற்பக் கலைஞர் |

Best Compliments From

**Shanthi Theatre**
Phone No.2635

**'K' Theatre**
Phone No.2090

**Rao and Khan Motor's**
Krishnagiri
Phone No.2857

